Page no! 564-578

# அனைத்துலகச் சைவ மாநாடு - 2017

## " சைவ சித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும் "

## ஆய்வடங்கல்

**ISC**
**2017**

21, 22,23 - ஏப்ரல் - 2017
இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

இரண்டாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2017
ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்

கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்

திரு. ச. முகுந்தன்

திரு. ச. பத்மநாபன்

திரு. பொ. சந்திரசேகரம்

திரு. சி. ரமணராஜா

திரு. தி. செல்வமனோகரன்

திரு. க. கந்தவேள்

**பொறுப்புத் துறத்தல்**

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

# இலங்கையின் சோழர்காலக் கல்வெட்டுகளில் சிவன்

ச. சிவரூபி

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழக வரலாற்றிலே கி.பி 850 - 1230 ஆகிய காலகட்டங்களை உள்ளடக்கிய சோழப் பேரரசு காலம் பல துறைகளிலும் வளர்ச்சி பெற்ற ஒரு பொற்காலமாகும். முதலாம் இராஜராஜன் தொடக்கம் முதலாம் குலோத்துங்கன் காலம் வரை (993 - 1070) இலங்கையில் சோழர் செல்வாக்கு நேரடியாக ஏற்பட்டிருந்தது. சோழப் பேரரசின் ஓர் மண்டலமாக இலங்கையை இணைத்த சோழர் பொலனறுவையைத் (ஜனநாத மங்கலம்) தலைநகரமாகக் கொண்டு பல்வேறு வளநாடுகளாகவும், நாடுகளாகவும், சதுர்வேதி மங்களங்களாகவும் பிரித்து நிர்வாகத்தினை மேற்கொண்டிருந்ததுடன், அவர்கள் கால பொருளாதார, சமய, சமூக பண்பாட்டு அம்சங்கள் யாவும் நன்கு தடையின்றி இலங்கையிலும் பிரதிபலித்திருந்தது. சோழரின் இலங்கை மீதான நடவடிக்கைகளை இன்றுவரை பிரதிபலிக்கும் வகையில் கல்வெட்டுக்கள், நாணயங்கள், இலக்கியங்கள், கட்டிட, சிற்பக்கலை அம்சங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் சோழருடைய கல்வெட்டுக்கள் மிக முக்கியமான தொல்லியல் எச்சங்களாகும். சோழர்கள் பிற சமயத்தை ஆதரித்த போதிலும் சைவ சமயத்திற்திற்கு பெரு ஆதரவு வழங்கியிருந்தனர். சோழ மன்னர்களில் பெருன்பான்மையானவர்கள் சிவ பக்தர்களாக விளங்கியிருந்தனர். சோழர்கள் பிரமாண்டமான கலைக்கூடங்களாக கோயில்களை அமைத்திருந்ததுடன் பெரும்பாலும் அச் செய்தியினையும் கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றிய விபரங்களையும் கோயில் சுவர்களிலும், தூண்களிலும் கல்வெட்டுக்களாக செதுக்குவது அவர்களது வழமையாகும். சோழராட்சி 77 ஆண்டுகள் இலங்கையில் நிலைபெற்றிருந்த காலப்பகுதியில் பல்வேறு சாசனங்கள் எழுதப்பட்டிருந்ததுடன் அவற்றில் பெரும்பாலானவை சமய சார்பானவையாகவே அமைந்திருந்தன. இச் சாசனங்கள் மாந்தை, பதவியா, கந்தளாய், நிலாவெளி, மானாங்கேணி, திருகோணமலை, யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை, அத்தரகல, கடவத், மெஹிகிரியா ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

இலங்கையில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்கள் இங்கு நாயன்மார்களால் பாடல் பெற்ற சிவாலயங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்றன புனரமைக்கப்பட்டதனையும், புதிதாக பல சிவன் கோயில்கள் அமைக்கப்பட்டதனையும், இவ் சிவன் ஆலயங்களில் அன்றாட பூஜை வழிபாடுகள், கிரியைகள், திருவிழாக்கள் போன்றன சிறப்பாக இடம் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் பற்றியதாகவும், சிவன் கோயிலுக்கு வழங்கப்பட்ட பலவகை தானங்கள் பற்றியதாகவும், தானங்கள் வழங்கப்பட்டதன் நோக்கங்கள் பற்றியதாகவும் அமைகின்றது. இவ் சோழக் கல்வெட்டுக்களை சான்றாதாரமாக கொண்டு நோக்கும் போது சோழர் கால இலங்கையில் ஈஸ்வரங்களான சிவன் கோயில்கள் சிறப்புற்ற தன்மையினையும், சிவன் கோயில் நடவடிக்கைகள் பற்றியும், இக் கோயில் நடவடிக்கைகளில் பங்கு கொண்ட சமூகத்தின் பல பிரிவுகள் பற்றியும் அறிய முடிகின்றது. எனினும் சோழக் கல்வெட்டுக்களில் பெரும்பான்மையானவை சிதைவடைந்த நிலையிலேயே கிடைக்கப்பெற்றமையானது கல்வெட்டு செய்திகளை முழுமையாக அறிய முடியாதுள்ளது. காலத்துக்கு காலம் இடம்பெற்ற ஆட்சிமாற்றங்கள் மற்றும் அந்நியரது கலையழிவுக் கொள்கைகள் போன்ற காரணங்களால் சோழக் கல்வெட்டுக்களில் பெருன்பான்மையானவை அழிந்தும், அழியாத நிலையிலுமே கிடைக்கப்பெற்றுள்ளன. எஞ்சிய கல்வெட்டு எச்சங்களை கொண்டே சோழர் கால இலங்கையில் சிவ வழிபாடு சிறப்புற்றிருந்ததனை அறிய முடிகின்றது. இக் கல்வெட்டுச் செய்தியினை உறுதிப்படுத்தும் விதமாக இன்று வரை எஞ்சியிருக்கும் தொல்லியல் எச்சங்களான பூநகரி மண்ணித்தலை சிவனாலயம், நெடுந்தீவு சிவன் ஆலய எச்சங்கள், பொலனறுவை சோழர்கால சிவனாலயங்கள் மற்றும் இலங்கையின் பல்வேறு இடங்களில் சோழர் காலத்துக்குரியதாக அடையாளப்படுத்தப்பட்ட சிவலிங்கங்கள், நடராஜர், அர்த்தநாரீஸ்வரர், சிவன், பார்வதி விக்கிரக வடிவங்கள் என்பன அமைந்துள்ளன.

**திறவுச்சொற்கள்** : சோழர். கல்வெட்டு. ஈஸ்வரங்கள். சிவன். தானம். கோயில் நிர்வாகம்.

---

தொல்லியல் விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

*T.P 0775581538, Sivaruby17@gmail.com.*

**அறிமுகம்**

தமிழக வரலாற்றிலே கி.பி 850 - 1230 ஆகிய காலகட்டங்களை உள்ளடக்கிய சோழப் பேரரசு காலம் பல துறைகளிலும் வளர்ச்சி பெற்ற ஓர் பொற்காலமாகும். ஒன்பதாம் நூற்றாண்டில் விஜயாலய சோழன் தஞ்சாவூரை மையப்படுத்தி சோழ அரசினை அமைத்துக் கொண்ட போதிலும் பத்தாம் நூற்றாண்டில் முதலாம் இராஜராஜன் (985 - 1016) அவனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த முதலாம் இராஜேந்திர சோழன் ஆட்சிக் காலங்களிலேயே சோழப் பேரரசு ஆட்சித் திறன், வணிக வளர்ச்சி, பொருளாதார சிறப்பு, சமய கலாசார வளர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் தென்னாசியாவிலேயே முதன்மை பெற்றுத் திகழ்ந்தது. இக் காலத்தில் பாண்டி நாடு, சேர நாடு, இலங்கை, கொல்லம், கங்கபாடி, நுளம்பாடி, வேங்கி, மேற்கிலுள்ள தீவுக் கூட்டங்கள் சில சுருங்க கூறின் கங்கை முதல் கடாரம் வரை படையெடுப்புக்களை மேற்கொண்டு வெற்றி பெற்ற சோழர் தமது புகழினையும், ஆதிக்கத்தினையும் நிலைநிறுத்தி சோழப்பேரரசினை திறம்பட நிறுவியிருந்தனர்.

தஞ்சைப் பெருங் கோயிலிலுள்ள முதலாம் இராஜராஜன் கால கல்வெட்டுச் செய்தியின் அடிப்படையில் அவனது எட்டாம் (கி.பி 993) ஆண்டிலேயே இலங்கையின் வட பகுதி யியை சோழர் கைப்பற்றிக் கெண்டதனை அறிய முடிகின்றது. இச் செய்தியினை மேலும் உறுதிப்படுத்துவதாக இலங்கையின் மாதோட்டம், பதவியா, திருகோணமலை ஆகிய இடங்களில் கிடைக்கப் பெற்ற முதலாம் இராஜராஜன் கால கல்வெட்டுக்கள் அமைந் துள்ளன. தொடர்ந்து முதலாம் இராஜேந்திர சோழன் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் சோழராட்சி மேலும் விரிவு பெற்றிருந்தது. இச் செய்தியினை ஊர்காவற்துறையில் கிடைக்கப் பெற்ற முதலாம் இராஜேந்திர சோழனது மாதோட்டக் கல்வெட்டு "...ஈழமான மும்முடி சோழ மண்டலத்து பாண்டியர் குலதனமாக வைத்த முடியும் ஈழத்தனரயர் தம் முடியும் ஆங்கவன் தெவி முடியும் பெண்டிர் பண்டாரமும் பிடி(த்து) கொண்டு போன அதிகாரத் (தண்)டநாயக(ஞ்)..." என்ற வரியின் ஊடாக உறுதிப்படுத்துகின்றது.[1] இவ்வாறாக இலங்கையில் ஏற்பட்ட சோழராட்சி முதலாம் குலோத்துங்கன் காலம் வரை (993 - 1070) நிலைபெற்றிருந்தது. சோழப் பேரரசின் ஓர் மண்டலமாக இலங்கையை இணைத்த சோழர் பொலனறுவையைத் (ஜனநாத மங்கலம்) தலைநகரமாகக் கொண்டு பல்வேறு வளநாடுகளாகவும், நாடுகளாகவும், சதுர்வேதி மங்களங்களாகவும் பிரித்து நிர்வாகத்தினை மேற்கொண்டிருந்ததுடன் மட்டுமல்லாது அவர்கள் கால பொருளாதார, சமய, சமூக பண்பாட்டு அம்சங்கள் யாவும் தங்கு தடையின்றி இலங்கையிலும் பிரதி பலித்திருந்தது.

சோழப் பேரரசு காலத்து சமூகத்தில் சிவனை முழுமுதற் கடவுளாக கொண்ட சைவமே முதன்மை சமயமாக விளங்கியிருந்தது. சோழர்கள் ஏனைய சமயங்களையும், சமயப் பிரிவுகளையும் ஆதரித்த போதிலும் அவர்கள் சிவபக்தர்களாகவே விளங்கியிருந்தனர். பக்தியியக்கமும் அதன் அடிப்படையிலான சைவ சமய வளர்ச்சியினையும் கருத்தில் கொண்ட சோழப்பேரரசின் உருவாக்கம் கூட சைவசமயத்துடன் இரண்டறக்கலந்திருந்தது. பல்வேறு சமுதாயத்தினரையும் ஒன்றிணைக்கும் ஊடகமாகவே அவை விளங்கியிருந்தன. அரசர்களும், அரச குடும்பத்தினைச் சேர்ந்த வர்கள் மட்டுமன்றி சமுதாயத்தின் பல்வேறு நிலையில் உள்ளவர்களும் சைவ சமய வளர்ச் சிக்கு பங்காற்றியிருந்ததனை சோழர் கால வரலாற்று, தொல்லியல் ஆவணங்களிருந்து அறிய முடிகின்றது. சோழர்காலத்தில் பக்தியியக்கத்தின் நிறுவன

அமைப்பான கோயில்களும் மடங்களும் பெருவளர்ச்சி கண்டதுடன் சைவசித்தாந்தம் முறைப்படுத்தப்பட்டது. இக் காலத்தில் தான் சைவ சமயத்தின் சிறப்பான படைப்பான பெரியபுராணம் சேக்கிழாரினால் உருவாக்கப் பட்டது.

சோழராட்சி 77 ஆண்டுகள் இலங்கையில் நிலைபெற்றிருந்த காலப்பகுதியில் பல் வேறு சாசனங்கள் எழுதப்பட்டது. அவற்றில் பெரும்பாலானவை கல்லில் பொறிக் கப்பட்டனவாய் அமைந்திருந்ததோடு, சமய சார்பானவையாகவே அமைந்திருந்தன. இச் சாசனங்கள் மாந்தை, பதவியா, கந்தளாய், நிலாவெளி, மானாங்கேணி, திருகோணமலை, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, அத்தர கல, கடவத், மெடிறிகிரியா ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. இலங்கையிற் கிடைத்த சோழக் கல்வெட்டுக் களினை கல்வெட்டுவியலாளரான அறிஞர் எ.சுப்பராயலு, எச்.கிருஸ்ணசாஸ்திரி, பேராசிரியர்.ப.சண்முகம், கலாநிதி. கா. இந்திராபாலா, பேராசிரியர் சி.பத்மநாதன், ஆ.வேலுப்பிள்ளை, செ.குணசிங்கம் ஆகியோர் ஆராய்ந்து பதிப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**இலங்கை சோழக் கல்வெட்டுக்களில் சிவன் ஆலயமான ஈஸ்வரங்கள்**

இலங்கையில் கிடைத்த சோழக் கல் வெட்டுக்களின் அடிப்படையில் சிவ வழிபாடு பற்றி ஆராயும் போது, இக் கல்வெட்டுக்களில் 75 வீதமானவை ஏதொவொரு வகையில் சிவ வழிபாட்டுடன் தொடர்புடையதாகவே காணப்படுகின்றது. குறிப்பாக சிவனுக்கு அமைக்கப்பட்ட ஆலயங்களான ஈஸ்வரம் தொடர்புடையதாகவும், அவற்றுக்கு அளிக்கப்பட்ட தானம் பற்றியதாகவும் அமைந்துள்ளது. தஞ்சை இராஜராஜஈஸ்வர தளிச்சேரிக் கல்வெட்டு பற்றி ஆராய்ந்த சுரேஷ். பி.பிள்ளை என்பவர் கோயில் - தளி - ஈஸ்வரம் என்ற பெயர் அமைப்பிலேயே சோழர் காலக் கோயில்களின் படிமுறை வளர்ச்சியைக் காணமுடியும் என்கிறார்.[2] இங்கு ஈஸ்வரம் எனும் ஆலய அமைப்பு முறையினை சிவனுக்குரியதாகவே அடையாளங் காணமுடிகின்றது. சிவனுக்குரியதான ஈஸ்வரங்களினை தமிழகம், இலங்கை போன்ற இடங்களில் பரவலாக காணமுடிகின்றது. சைவ சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட சோழர்கள் நூற்றுக்கணக்கான சிவன் கோயில்களை கட்டினார்கள். இவர்கள் பல கோயில்களை புதிதாக அமைத்ததுடன், பல்லவர் காலத்தில் பாடல் பெற்ற தலங்களையும், பாடல் பெறாத தலங்களையும் இக் காலத்தில் புதுப்பித்தும் கட்டினார்கள். சோழர் கால சமுதாய நிறுவனமாக அமைந்த கோயில்கள் அரசனுக்கும் சமுதாய மக்களுக்குமிடையே ஓர் இணைப்பு பாலமாக விளங்கியது.

இந்தவகையில் இலங்கையில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்களை சான்றா தாரமாகக் கொண்டு நோக்கும் போது, இங்கும் நாயன்மார்களால் பாடல் பெற்ற சிவாலயங் களானதிருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்றன புனரமைக் கப்பட்டதனையும், புதிதாக பல கோயில்கள் அமைக்கப்பட்ட செய்தியினையும் அறிய முடிகின்றது. முதலாம் இராஜராஜன் காலத்தில் அருண்மொழித்தேவ வளநாட்டு மாதோட்டமான இராஜராஜ புரத்தில் இராஜராஜ ஈஸ்வரம் அமைக்கப்பட்ட செய்தியினை முதலாம் இராஜராஜனின் திருக்கேதீஸ்வரக் கல்வெட்டு "சோழமண்ட லத்து ஷத்திரிய சிகாமணி வளநாட்டு வேளார் நாட்டுச் சிறுகூற்ற நல்லூர் கிழவன் தாழிகுமரன் ஈழமான மும்முடிச்சோழ மண்ட லத்து மாதோட்டமான ராஜராஜபுரத்து எடுப்பித்த ராஜராஜ ஈஸ்வரத்து..." எனக் குறிப்பிடுகின்றது.[3] இராஜராஜ ஈஸ்வரம் மாதோட்டத்தில் அமைந்ததென்று இக்

கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுவதிலிருந்தும், கல்வெட்டு திருகேதீஸ்வரத்தில் காணப்படுவதானாலும்பாடல்பெற்றதலமானதிருகேதீஸ்வரத்தில் புதிய கோயிலொன்றை தாழிக்குமரன் அமைந்தான் எனக் கருதலாம்.

முதலாம் இராஜேந்திர சோழனின் திருக்கேதீஸ்வரக்கல்வெட்டு திருவிராமீஸ்வரம் எனும் சிவன் ஆலயம் மாதோட்டத்தில் அமையப்பெற்ற செய்தியினைக் குறிப்பிடுகின்றது. இராஜேந்திர சோழனின் பெருந்தனத்துப் பணிமகன் சிறு குளத்தூருடையான் தேவனால் திருவிராமீஸ்வரம் எனும் கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றி மேலும் கூறுகின்றது.[4] இக் கல்வெட்டு செய்தியின் படி திருவிராமீஸ்வரம் எனும் சிவன் கோயிலும் திருக்கேதீஸ்வர வளாகத்தில் அமைந்திருந்தது எனக் கருதலாம் சிவனுக்கு அமைக்கப்பட்ட பல கோயில்கள் ஒரே வளாகத்துள் அமைக்கப்படுவது சோழர்கால வழமையாகும்.

சோழர்களின் ஈழமண்டலத்தின் தலைநகரான பொலனறுவையில் (ஜனநாதமங்கலம்) தென்னிந்தியாவிலிருந்து வந்த நிர்வாக அதிகாரிகளும், படையினரும், வணிக குழுக்களும், தொழில் வினைஞரும், பிராமணர்களும், மற்றும் வேறு பல சமூகப்பிரிவினரும் இங்கு தங்கியிருந்தனர். இவர்களின் வழிபாட்டுத் தேவை கருதி பல ஆலயங்கள் பொலனறுவையில் அமைக்கப்பட்டன. இங்கு கி.பி 1000 - 1300 காலப்பகுதிக்குரியதான பதினான்கு இந்து ஆலயங்கள் தொல்லியல் அகழ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. பதினான்கு இந்து ஆலயங்களில் ஏழு ஆலயங்கள் சிவனாலயங்களாகும். இவற்றில் வானவன் மாதேவீஸ்வரம் என அழைக்கப்படும் இரண்டாம் சிவாலயம், மூன்றாம் சிவாலயம், ஐந்தாம் சிவாலயம், ஆறாம் சிவாலயம் என்பன சோழர் காலத்தினவாகும். சோழக் கல்வெட்டுக்களின் அடிப்படையில் நோக்கும் போது வானவன் மாதேவீஸ்வரம் மற்றும் ஐந்நூற்றுவர் ஈஸ்வரம் ஆகிய சிவனாலயங்களுக்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றிய செய்திகளை அறிய முடிகின்றது. பொலனறுவையில் சோழக் கல்வெட்டுக்கள் பல சமயச் சார்புடையதாக கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் அவை முற்றாக சேதமடைந்த வகையிலும், உடைந்து ஓரிரு வரிகள் மட்டுமே வாசிக்க கூடிய நிலையிலுமே காணப்படுவதால் அவற்றில் கூறப்பட்ட செய்திகளை பூரணமாக அறிந்து கொள்ள முடியாதுள்ளமை துரதிஸ்டவசமானதாகும்.

சோழர்கால இலங்கையில் அதி முக்கியத்துவம் பெற்ற ஓர் பண்பாட்டு, வர்த்தக மையமாக திருகோணமலை விளங்கிய தென்பதனை இங்கு கிடைக்கப்பெற்ற சோழர்கால தொல்பொருட்சின்னங்கள் பலவும் சான்றுபகர்கின்றன. சோழர் கால இந்துக் கலாசார மையங்களாக திருகோணமலை, கந்தளாய், பதவியா போன்றவை விளங்கியிருந்தன. பதவியாவில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் ஐந்து சிவாலயங்களின் அழிபாடுகள் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றில் முதலாவது சிவலாயத்திலிருந்து ஐந்து சோழக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக் கோயிலின் பெயர் இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் என கல்வெட்டினூடாக அறியமுடிகின்றது. முதலாம் இராஜராஜன் காலத்தில் பதவியாவிலிருந்த நானாதேசி வணிகராலும், நிர்வாக அதிகாரிகளாலும் இக் கோயில் அமைக்கப்பட்டதாகவும், கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றியதாகவும் இக் கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன. இரவிகுலமாணிக்க ஈஸ்வரத்தினை நிர்மாணிப்பதற்கு வேண்டிய அத்திவாரக் கற்களை இட்டவர்களாக நாராயணன் திருச்சிற்றம்பலமுடையான், வருதன்

திருமல், அழகன் உத்தரமாராலையன், அழகன் வத்தமான், தனி அப்பன் ஆகியோர் பற்றிக் இங்கு கிடைக்கப்பெற்ற கல்வெட்டு குறிப்பிடுவதனால், இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் பதவியாவில் சோழர்களால் அமைக்கப்பட்ட புதிய சிவன் ஆலயமாக கொள்ளமுடியும்.[5]

திருகோணமலையில் அமைந்துள்ள சிவனாலயமான திருக்கோணேஸ்வரம் நாயன்மார்களால் பாடல் பெற்ற தலமாகும். இவ் சிவனாலயம் மச்சகேஸ்வரம் எனும் இன்னொரு பெயராலும் அழைக்கப் பட்டதனை கைலாசபுராணம் முதலிய நூல்கள் குறிப்பிடுகின்றன. மச்சகேஸ்வரம் பற்றி திருகோணமலையில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்களான மானாங்கேணிச் கல்வெட்டு, நிலாவெளிக் கல்வெட்டு என்பவற்றின் ஊடாக அறிய முடிகின்றது. மானாங்கேணிச் கல்வெட்டானது சிதைவுற்ற நிலையில் ஒரு பகுதி மட்டுமே கிடைக்கப்பெற்றிருப்பதால் அவற்றின் குறிப்பிடப்பட்டிருக்கும் செய்திகளை முழுமையாக அறியமுடியவில்லை. எனினும் சோழ இலங்கேஸ்வரன்காலத்தில்மத்ஸ்யகேஸ்வரத்து மூலஸ்த்தானத்தை புனருத்தானம் செய்தமை பற்றிய செய்தியினை

"...ஸ்ரீ சோழ இல(ங்கேஸ்) (வரதே) தவற்க்கு யாண்டெ(டட்டாவது) (மும்மு)டி சோழ மண்ட(லத்து) (இராசே)ஜந்த்ர சோழ வளநாட்(டு) (மும்மு)டி சோழ வளநாட்(டு கோ'ணமா)மலை ஸ்ரீ மத்ஸ்யசே(கஸ்வ) (ரதமுடையார்) மூலஸ்தானமு(ம்..) ஸ்வரமுடையார் கே (ாயிலும்)..." என்ற சாசனக் குறிப்பினூடாக அறிய முடிகின்றது.[6]

திருகோணமலையின் மத்ஸ்யகேஸ்வரம் பற்றிய இன்னொரு செய்தியினை, "ஸ்ரீ கோணபர்வதம் திருக்கோணமலை மத்ஸ்ய கேஸ்வரமுடைய மஹாதேவர்க்கு..." எனத் தொடங்கும் நிலா வெளிக் கல்வெட்டின் ஊடாகவும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

இக் கல்வெட்டுக்களின் ஊடாக சோழர் காலத்திற்கு முன்பே திருகோணமலையில் அமைந்திருந்த மத்ஸ்யகேஸ்வரம் சோழர் காலத்திலும் சிறப்புமிக்க சிவன் ஆலயமாக விளங்கியிருந்தமையும், அவ் ஆலயத்தினை சோழர்கள் புனருத்தாரனம் செய்திருந்ததோடு, தானங்கள் பலவற்றை வழங்கியிருந்தமையும் அறிய முடிகின்றது.

இரண்டாம் இராஜேந்திரன் காலக் கல்வெட்டொன்று மெடிறிகிரியாவில் கிடைக்கப்பெற்றுள்ளது. இக் கல்வெட்டின் படி மெடிறிகிரியா மண்டலகிரி, நித்தியவிநோதபுரம் என அழைக் கப்பட்டதோடு இங்கு இருந்த பண்டித சோழ ஈஸ்வரம் எனும் சிவன் கோவிலுக்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றியதாக அமைந்துள்ளது.

சோழர் கால இலங்கையில் இருந்த சிவன் ஆலயங்களில் ஒன்றாக உத்தமசோழ ஈஸ்வரம் காணப்படுகின்றது. பதினோராம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்த தமிழ்ப்பிரதானிகளால் அமைக்கப்பட்ட இவ்வாலயம் பற்றி வடமத்திய மாகாணத்துக் கடவத்கோறளையிலுள்ள ஆதகட என்னும் ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட சோழக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. அரங்கன் இராமேசன் என்பவனால் உத்தமசோழ ஈஸ்வரம் என்னும் சிவன் ஆலயத்திற்கு அளிக்கப்பட்ட தானங்கள் பற்றியதாகவே இக் கல்வெட்டு அமைந்துள்ளது.[7] யாழ்ப்பாணக்கோட்டையில் முதலாம் இராஜேந்திரன் காலத்து கல்வெட்டு ஒன்று மிகவும் சிதை வடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையால் முழுமையாக இச் சாசனம் கூறும் செய்தியினை அறியமுடியவில்லை. நல்லூர் பகுதியில்

அமையப்பெற்ற ஆலயம் ஒன்றிற்கு தானம் வழங்கிய செய்தியினை இக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.[8] இவ் ஆலயம் சிவன் ஆலயமாக இருக்கலாம்? என்பதனை ஊகத்தின் அடிப்படையிலேயே கொள்ள முடியும்.

இலங்கையில் கிடைத்த சோழக் கல் வெட்டுக்களை அடிப்படையாக வைத்து நோக்கும் போது சோழர்கள் பல சிவன் ஆலயங்களை அமைத்தும், புனருத்தானம் செய்தது மட்டுமன்றி பல்வேறு வகையான தானங்களையும் சிவன் ஆலயங்களின் செயற்பாடுகளுக்காக வழங்கியுள்ளமையையும் அறிய முடிகின்றது. இவ் சிவன் ஆலயங்கள் ஈஸ்வரம் எனப் பெயர் பெற்றமையை இராஜராஜஈஸ்வரம், திருவிராமீஸ்வரம், வானவன் மாதேவீஸ்வரம், ஐந்நூற்றுவர் ஈஸ்வரம், இரவிகுலமாணிக்க ஈஸ்வரம், மத்ஸ்யகேஸ்வரம் பண்டித சோழ ஈஸ் வரம், உத்தம சோழ ஈஸ்வரம் என சோழக் கல்வெட்டுக்களில் காணப்படும் ஆலயப் பெயர்கள் உறுதிப்படுத்துகின்றது. இலங்கையின் பல பாகங்களிலும் சோழர் கால கலைப்பாணிக்குரியவையாக கண்டுபிடிக்கப்பட்ட சிவன் ஆலய அழி பாடுகளும், விக்கிரகங்கள், சிற்பக்கலை மரபுகளும் இக் கல்வெட்டுச் செய்திகளை உறுதிப்படுத்துபவனாய் அமைந்துள்ளன.

### இலங்கை சோழக் கல்வெட்டுக்களில் சிவன் கோயிலுக்குரிய தானங்கள்

சோழர் காலத்தில் சமய நிறுவனமான கோயில்கள் அரசியலின் அடிப்படை ஆதார மாகியது. சோழப்பேரரசின் உருவாக்கமும் சைவ சமய வளர்ச்சியும் ஒன்றோடொன்று இணைந்திருந்தது. இதன் காரணமாக இக் காலத்தில் சைவக் கோயில்கள் பல்கிப் பெருகின. மன்னர்களும் அவர்தம் அரசியரும், அவர்களது உறவினர்களும் சிவன் கோயிலுக்கு தானங்களை வாரி வழங்கினர். இவர்களை முன்னுதாரணமாகக்கொண்டு அமைச்சர்களும், குறுநில மன்னர்களும், நிலப்பிரபுக்களும், வணிகர்களும், செல்வாக்குள்ள பிற குலத்த வர்களும், அரசாங்க அலுவலர்களும், அவர் தம் மனைவியரும், குடிமக்கள் என சமூகத்தின் பல்வேறு நிலையினரும் சிவன் கோயிலுக்கு பல அறப்பணிகளையும், தானங்களையும் வழங்கியிருந்தனர். இலங்கையில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்களின் அடிப்படையில் சிவன்கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்களும், தானம் வழங்கியமைக்கான நோக்கங்களும் பின்வருமாறு காணப்படுகின்றது.

1. சிவன்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் "தேவதானம், திருநாமத்துக் காணி"
2. சிவன் கோயிலுக்கு விளக்கு எரிப்பதற்கான ஏற்பாடுகள் - நெய், பசு, சாவாமூவப்பேராடு, தென்னை
3. சிவன் கோயிலுக்கு வேண்டிய விளக்குகள் - திருநந்தா விளக்கு, தாராநிலை விளக்கு, சந்தி விளக்கு
4. பொன்
5. அரசிறை வருமானங்கள் - வணிக நடவடிக் கைகள் ஏனைய தொழில் நடவடிக்கைகள் ஊடாக பெறப்படும் வரிகள்.
6. வெண்கல எறிமணி

இவ்வகையான தானம் வழங்கப்பட்ட மைக்கான நோக்கங்கள்,

1. சிவன் கோயிலின் வருடாந்த திருவிழா நிகழ்த்துதல்
2. சிவன் கோயிலின் அன்றாட பூஜை வழிபாடுகள்
3. சிவன் கோயிலில் விளக்கு எரித்தல்
4. சிவன் கோயிலில் திருவமிர்து செய்து நெய்வேத்தியம் படைத்தல்
5. சிவன் கோயிலின் பிராமணர், மடபதி களுக்குரிய வேதனம்

முதலாம் இராஜராஜனின் திருக் கேதீஸ்வரக் கல்வெட்டு செய்தியின் படி திருக்கேதீஸ்வரத்தில் இராஜராஜ ஈஸ்வரம்

எனும் கோயிலினை தாழிக்குமரன் அமைத்ததுடன் அக்கோயிலின் அன்றாட பூஜை வழிபாடுகள் மற்றும் வருடாந்த திருவிழா என்பன இடம் பெறுவதற்கு வேண்டிய நன்கொடைகளையும் ஏற்பாடு செய்திருந்தான். ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்துடன் கூடிய நாள் உட்பட ஏழு நாட்கள் திருவிழாவும் கடைசி நாள் தீர்த்தமும் நடைபெறுவதற்கு வேண்டிய செலவுக்களுக்கான தானம் நெசவுத் தறிகள், வட்டம், பாதை கடவுகள் என்பவற்றின் ஊடாக கிடைத்த வருமானங்கள் கோயிலுக்குரிய நன்கொடையாக வழங்கப்பட்டது. கீழ் வரும் சாசனப் பகுதி இதனை ஆராய்கின்றது.

"...ஈழமான மும்முடி சோழ மண்டலத்து மாதோட்டமான ராஜராஜ ஈஸ்வரத்து மஹா தேவர்க்கு... இவ்வூரில் நெய்யும் தறிகளால் கூடின முதலும் வட்டத்தால் கூடின முதலும் பாதை படவுகளால் கூடின முதலுங் கொண்டு திருநாட்த்தர்மம் வைய்யாசி விசாகம் ஏழு நாளும் விழா வெடுத்து தீர்த்தம் அட்டுவிப்பதாகவும்...."[9]

இக் கல்வெட்டின் ஒருபகுதி இராஜராஜ புரத்து ஆலயத்தில் நாள்தோறும் மூன்று வேளை வழிபாடுகள் நடைபெறுவதற்கும், ஒவ்வொரு வேளையும் இருபடி அரிசி கொண்டு திருவமிர்து செய்து நெய் வேத்தியம் படைப்பதற்கும், பூஜை வழி பாடியற்றுவதற்க்கு பிராமணர் இருவர் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான வேதனமாக நெல்லும், எண்ணெயும் வழங்குவதற்குமான ஏற்பாடுகள் பற்றி விரிவாக கூறுகின்றது. இராஜராஜபுரத்துக்கு வழங்கப்பட்ட தானங்களில் ஒன்றான இறையிலித் தேவதானம் பற்றியும் இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இக் குறிப்பிலே சில பகுதிகள் சிதைவுற்ற படியால் என்ன தேவைக்காக நிலம் வழங்கப்பட்டுள்ளது என அறியமுடியவில்லை. எனினும் நிலத்தை அளந்து எல்லைகள் நிச்சயித்து இறையிலியாக வகைசெய்யப்பட்டமை பற்றி அறிய முடிகின்றது.

இலங்கையில் கிடைக்கப்பெற்ற சோழக் கல்வெட்டுக்களின் பெரும்பாலானவை சிவன் ஆலயங்களுக்கு விளக்குகள் தானமாக கொடுக்கப்பட்டது பற்றியதாகவும், மூன்று வேளை விளக்கு எரிப்பதற்கு வேண்டிய நிவந்தங்கள் பற்றியதாகவுமே அமைந்துள்ளது. பொதுவாக சோழர் காலத்தில் சந்தி விளக்கு, நந்தா விளக்கு, கால் விளக்கு, அரை விளக்கு என விளக்குகள் பெயர் பெற்றது. நந்தா விளக்கு என்பது எப்போதும் இறைவன் திருமுன் எரியும் விளக்காகும். சந்தி விளக்கு காலையிலும் மாலையிலும் ஏற்றப்படுவதாகும். சிவன் ஆலயங்களில் விளக்கு எரிப்பதற்கு பொன், காசு, பசு, சாவாமூவாப்பேராடு, தென்னை போன்றவற்றை தானமாக வழங்கப்பட்டிருந்தது. இதனைப் பெற்றுக் கொண்ட கோயில் நிர்வாகமே அல்லது அறக்கட்டளை நிறுவனமே ஆலயங்களில் விளக்கெரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. வழங்கப்பட்ட தானங்கள் பொன் அல்லது காசுகளாக இருப்பின் அதனை பெற்றுக்கொண்டு வட்டிக்கு கொடுத்து வட்டியால் வரும் வருமானத்தைக் கொண்டு விளக்கெரிப்பதை நிவைவேற்றியது. கால்நடைகள், தென்னைகள் தானமாக வழங்கப்பட்டபோது அவற்றினை இடையர், விவசாயிகளிடம் கொடுத்து அவர்களிடமிருந்து நெய், எண்ணெய் பெற்று கோயில் விளக்கெரிப்பதை நிறைவேற்றியது.

முதலாம் இராஜேந்திர சோழனின் திருக்கேதீஸ்வரக் கல்வெட்டானது, திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள திருவிராமீஸ்வரம் என்னும் சிவாலயத்திற்கு உற்சவ காலத்தில் ஆனித்திங்கள் முதலாக விளக்கெரிப்பதற்கு சோழரின் படையமைப்பிற

பணி புரிந்த சிறுகுளத்தூருடையான் தேவன் என்பவன் செய்த ஏற்பாடுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. சிறுகுளத்தூருடையான் திருவிராமீஸ்வரசிவன் ஆலயத்திற்கு விளக்குகள் இரண்டினைத் தானமாக வழங்கியதோடு, உற்சவ நாளொன்றில் விளக்கு எரிப்பதற்கு நான்கு காசுகளை முதலிருப்பாக தானம் கொடுத்தான். அவ் காசுகள் சங்கரப்பாடியார் (இரண்டு காசு), வாழைக்காய் வணிகர் (ஒரு காசு), வெற்றிலை வணிகர்(ஒரு காசு) எனும் மூவரிடம் பிரித்து கொடுக்கப்பட்டு அவர்கள் மூவரும் கோயிலுக்கு விளக்கு எரிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட செய்தியினையும் இக் கல்வெட்டு ஊடாக அறியமுடிகின்றது.[10]

வடமத்திய மாகாண கடவத் என்னும் பிரிவில் உள்ள ஆதகட என்னும் ஊரிற்கிடைத்த கல்வெட்டு உத்தமசோழ ஈஸ்வரம் என்னும் சிவன் ஆலயத்திற்கு அரங்கன் இராமேசன் என்பவன் ஒரு வேலி நிலமும், நந்தா விளக்கு எரிப்பதற்கு 20 பசுக்களையும், ஐந்து சந்தி விளக்கு எரிப்பதற்கு 50 தென்னைகளையும் தானமாக கொடுக்கப்பட்ட செய்தியினை குறிப்பிடுகின்றது. பொலனறுவை வானவன் மாதேவீஸ்வரத்துக் கல்வெட்டு இரண்டு அதிராஜேந்திரன் காலத்துக்குரியதாக அடையாளங்காணப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று தாராநிலைவிளக்கு ஒன்று இவ்சிவாலயத்திற்க்கு தானமாக வழங்கப்பட்டமையாகும். மற்றைய கல்வெட்டு வானவன் மாதேவீஸ்வரத்து சிவன் ஆலயத்திற்கு சோழ மண்டலத்து மங்கலப்பாடி வேளான் கங்கை கொண்ட சோழ பல்லவரையன் என்பவன் நந்தா விளக்கு ஒன்றினை எரிப்பதற்கு ஐந்து காசினை முதலிருப்பாக வழங்கினான் என்பதைக் கூறுகின்றது.[11] வானவன் மாதேவீஸ்வரத்து துண்டமான கல்வெட்டு ஒன்று அக் கோயிலுக்கு நாள்தோறும் விளக்கெரிப்பதற்க்கு வேண்டிய நெய் வழங்குவதற்கான ஏற்பாடு பற்றிக் குறிப்பிடுகின்றது. நிஸங்கமல்லனால் அமைக்கப்பட்ட பௌத்த கட்டடப் படைப்பான வட்டதாகேயில் பொலனறுவை சோழக் கல்வெட்டுக்கள் நான்கு துண்டமான நிலையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவை சைவாலயம் ஒன்றின் இடிபாடுகள் பௌத்தக் கோயிலின் கட்டடப் பொருள்களாக உள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது. எனினும் இக் கல்வெட்டுக்களில் ஒன்று சைவ ஆலயம் ஒன்றிற்கு நெய் வழங்குவதற்கு 30 பசுக்கள், இரு சாண் நீளத்து விளக்கு வழங்கியமை பற்றிய செய்தியினையே குறிப்பிடுகின்றது.

பதவியாவில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாம் இராஜராஜன் காலத்து கல்வெட்டு ஒன்று இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் எனும் சிவன் கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்கள் பலவற்றைக் குறிப்பிடுகின்றது. முதலாவதாக ஆறு தானக்காரர் ஒவ்வொருவராக இரவிகுலமாணிக்க ஈஸ்வரத்தில் விளக்கெரிப் பதற்கு வேண்டிய நந்தா விளக்குகள் ஆறினை தானமாக வழங்கிய செய்தியும், ஐந்து பேரால் வழங்கப்பட்ட சந்தி விளக்கு தானம் பற்றிய செய்தியும், வெண்ணாயில் வெண்காடன் கொடுத்த வெண்கல எறிமணி, வேறொரு வெண்கலப் பொருள் என்பன தனம் வழங்கிய செய்திகளைக் குறிப்பிடுகின்றது. இரண்டாவதாக மூன்று பேரால் ஈஸ்வரத்திற்க்கு தானமாக வழங்கப்பட்ட திருநந்தா விளக்கு, பட்டம், பொன் கழஞ்சு என்பன பற்றியும், இறுதியாக நெய் அளந்து கொடுப்பது பற்றிய நிபந்தனையையும் இக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

நிலாவெளிக் கல்வெட்டு திருக்கோணேஸ்வரமாகிய மச்சகேஸ்வரத்துக்கு வழங்கப்பெற்ற தேவதானம் பற்றிய செய்தியினைக் குறிப்பிடுகின்றது. மத்ஸ்ய கேஸ்வரமுடைய மஹாதேவர்க்கு நிச்சலழி(வு)

க்கு நிவந்தமாக நிலம் வழங்கப்பட்டிருந்தது. இவ் நிலம் 250 வேலி அளவினைக் கொண்ட பெரும்நிலப்பகுதியாகும். அவற்றினுள்நன்செய் நிலங்களும், புன்செய் நிலங்களும் அடங்கியிருந்தன. அந் நிலம் கிரிகாமம், கிரிகண்ட கிரிகாமம் என்னும் ஊர்களைச் சேர்ந்ததாகவும், அதன் எல்லைகள் பற்றியும் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. அவ்வெல்லைகள் பற்றி கல்வெட்டு பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "இந் நிலத்துக்கெல்லை கிழக்குக்கழி எல்லை, தெற்கெல்லை கல்லு, குடக்கு எத்தகம்பே எல்லை, வடக்குகெல்லை சூலக்கல்லாகும்".

**சோழர் கால இலங்கையில் சிவன் கோயிலுடன் தொடர்புடைய சமூகத்தவர்கள்**

சோழர் கால கோயில்கள் பாரிய கட்டிட, சிற்ப, ஓவிய கலைக் கூடங்களாகவும், பூஜை வழிபாடுகள், திருவிழாக்கள் இயற்றும் சமய நிறுவனங்களாகவும், ஓதுவார்கள், தேவாரடியார்களை நியமித்து இசை, நடன கலைகளை வளர்க்கும் மையங்களாகவும் விளங்கும் அதே வேளை அரசு என்ற நிறுவனத்தின் சமூக ஊடகத்திற்கான களமாகவும் விளங்கின. இவ்வாறான சமுதாய, சமய நிறுவனமாக விளங்கிய ஆலயங்களுக்கு பெருமளவு அசையும், அசையாச் செத்துக்கள் தானமாக குவிந்தது. சொத்துக்களை பாதுகாத்து, பராமரித்து ஆலய கடமைகளை நடத்தவும், நிர்வாகஞ் செய்யவும் சமூத்தின் பல்வேறு பிரிவினைச் சேர்ந்தவர்களும் ஒழுங்குபடுத்தப்பட்டனர். அவை காலப்போக்கில் அதிகார நிறுவனங்களாக மாற்றம் பெற்று அதிகார, ஆன்மீக நோக்கில் இயங்கப்பெற்றது. இவ்வாறான செயற்பாடுகளை சோழர்காலக் கல்வெட்டுக்கள் பலவும் பிரதிபலித்து நிற்கின்றது. இலங்கையில் கிடைத்த சோழக்கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை சிவன் கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றியதாக அமைந்துள்ளது. இவற்றினூடாக தானங்களை வழங்கிய சமூக பிரிவுகள் பற்றியும், சிவன் கோயில் நிர்வாகத்தில் ஈடுபட்டவர்களையும், சிவன் கோயிலுடன் தொடர்புடைய சமூகத்தவர்கள் பற்றியும் அறிந்து கொள்ளமுடிகின்றது. சமுதாயத்தில் அனைத்து மட்டங்களில் உள்ளவர்களும் சாதி, மத பேதங்கள் கடந்த நிலையில் சமய, சமூக நிறுவனங்களுடன் ஏதொவெரு வகையில் தொடர்புடையவர்களாகவே காணப்பட்டனர். இலங்கையில் கிடைத்த சோழக்கல்வெட்டுக்களின் அடிப்படையில்சிவ வழிபாட்டுடன் தொடர்புற்ற சமூகத்தவர்கள் விபரங்களை கீழ்வருமாறு அடையாளங் காணலாம்.

1. சோழ பிரதானி போன்ற உயர் பதவியில் இருந்தோர் (மூவேந்த வேளான்)
2. நிலவுடைமையாளன் (உடையான்)
3. நானாதேசிகன் போன்ற வணிக சமூகத்தவர்கள்
4. சோழ நிர்வாகத்தில் ஈடுபட்டவர்கள் (பல்லவரையன்)
5. படை வீரர்கள் (இளைய மும்முடிச் சோழ அணுக்கர்)
6. பிராமணர்கள் : சிவப் பிராமணன், பன்மாயேஸ்வரக் கண்காணி, பதிபாத மூலத்து பஞ்சாச்சாரியார்.
7. பன்மாகேஸ்வரர்
8. மடாதிபதிகள்
9. திருவாரதனை பண்ணும் கிரமவித்தர்
10. நாட்டவர்
11. தேவரடியார்
12. பணியாளர்கள்

மாதோட்டத்தில் அமைக்கப்பட்ட இராஜராஜ ஈஸ்வரம் எனும் சிவன் கோயிலுடன்தாழிக்குமரன் எனும் சோழ உயர் அதிகாரி தொடர்புடையவனாவான். சோழ மண்டலத்திலிருந்து சென்று மாதோட்டத்தில் அதிகாரம் பெற்ற பிரதானியான இவன் அரசாங்க வருமானங்களுக்கு பொறுப்பான

துறை மீது அதிகாரம் பெற்றிருந்தான். அத்துடன் இக் கோயிலுக்கு வேண்டிய நிவந்தங்கள், நன்கொடைகள் வழங்குவதற்க்கு அவனுக்கு அதிகாரம் கிடைத்திருந்தது. அரசாங்கத்துக்குரிய வரிகள் மாதோட்டத்து நெசவாளரிடமிருந்தும், வாணிபத்தில் ஈடுபடுவரிடமிருந்தும் பெறப்பட்டு கோயிலுக்கு வழங்கப்பட்டிருந்தமையால் இவ் சமூகத்தவர்களையும் கோயிலுடன் தொடர்புடையவர்களாக கருதலாம்.

சோழ நிர்வாக பிரிவிலே பணியாற்றிய பெருந்தனத்துப் பணி மகனாகிய சிறுகுளத்தூருடையான் தேவன் என்பவன் மாதோட்டத்திலே அமைக்கப்பட்ட திருவிராமீஸ்வரம் எனும் சிவன் ஆலயத்திற்கு விளக்கெரிப்பதற்கு நான்கு காசுகளை வழங்கியிருந்தான். அக்காசினை நகரத்தாரின் ஒரு பிரிவைச் சேர்ந்த சங்கரப்பாடியரிடமும், வெற்றிலை, வாழைக்காய் வணிகரிடமும் 2:1:1 படி வழங்கப்பட்டிருந்தது. அவ்காசினைப் பெற்று அதன்வட்டியைக்கொண்டு வணிகர்கள் சந்தி விளக்கெரிப்பதற்கு ஒப்புக் கொண்டதன் மூலம் இவர்களும் இவ் சிவன் கோயிலுடன் தொடர்புடையவர்களாவர்.[12] பொலனறுவை ஐந்தாம் சிவாலயக் கல்வெட்டானது அங்கு அமைக்கப்பட்ட ஐந்நூற்றூற்றுவர் ஈஸ்வரம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவ் சிவன் ஆலயத்துடன் தொடர்புடையவர்களாகவே அல்லது நிர்மாணித்தவர்களாகவே ஐந்நூற்றூற்றுவர் எனும் வணிக கணத்தவர் விளங்குவதாலேயே ஐந்நூற்றூற்றுவர் ஈஸ்வரம் எனப் பெயர் கொள்ளப்படுகின்றது.

பொலனறுவை அதிராஜேந்திரனின் மூன்றாவது ஆட்சியாண்டு கல்வெட்டு செய்தியின்படி, சோழ மண்டலத்து மங்கலப்பாடி வேளான் கங்கை கொண்ட சோழ பல்லவரையன் என்பவன் வானவன் மாதேவீஸ்வரத்து சிவன் கோயிலுக்கு நந்தா விளக்கு எரிப்பதற்க்கு காசு நன்கொடையாக வழங்கியிருந்தான். பல்லவரையன் என்ற பட்டத்தினை சோழரின் நிர்வாகப் பிரிவில் உயர் பதவிகளை வகித்தவர்களே கொண்டிருந்தார்கள். அவ் காசினை பெற்று அதன் வட்டியைக் கொண்டு இவ் சிவன் ஆலயத்திற்கு விளக்கெரிப்பதற்கு கோயிலுடன் தொடர்புடைய பல பிரிவினர் ஒப்புக் கொண்டிருந்தனர். பதிபாத மூலப் பட்டுடைப் பஞ்சாசாரிய தேவகன்மிகள், திருவாரதனை பண்ணும் கிரமவித்தர், சிவப்பிராமணர், இராஜாதிராஜ முத்தக்கரை நாடாழ்வான், உவச்சர், பரிசாரகர், பன்மாயேஸ்வரக் கண்காணி செய்வார், நாட்டவர், தேவரடியார் என சமூகத்தின் பல்வேறு நிலையில் உள்ளவர்களும் கோயிலின் அறக்கட்டளைக்கு கூட்டாக பங்காற்றியுள்ளார்கள். இக் கல்வெட்டிலிருந்து இவர்களின் அதிகாரம், நிலை, கடமைகள் என்ன என்பது பற்றி அறியமுடியாதிருப்பதனால் தென்னிந்திய கல்வெட்டு ஆதாரங்களின் துணை கொண்டு பார்க்கும் போது இவர்களின் முதல் மூவரும் சமய அறிவில் சிறந்தவர்களாயும், சிவாலய சமயக் கிரியைகள், விழாக்களை நடத்துபவர்களுமாவார். பதிபாத மூலத்தோர் என்போர் அதியுயர்ந்த தகைமை பெற்ற ஐவரைக் கொண்ட பிராமணக் குழுவாகும். சோழர் காலத்து சிவன் கோயிலுக்கு இத்தகைய பிராமணர்களை நியமித்து கிரியைகள், விழாக்கள் நடத்தப்பட்டது. இக் கல்வெட்டில் "சிவ" எனும் முன்னெட்டுச் சொல்லை உடைய பிராமணர் பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பது கவனத்திற்குரியதாகும்.

முதலாம் இராஜராஜன் காலத்தில் நானதேசிக வணிகராலும் நிர்வாக அதிகாரிகளினாலும் பதவியாவில் அமைக்கப்பட்ட சிவன் கோயிலாக இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் விளங்குகின்றது. இவ் சிவன் கோயிலை அமைப்பதற்கு வேண்டிய அத்திபாரக் கற்களை இவர்களே இட்டிருந்தார்கள். இச்

செய்தியினை பதவியாவில் கிடைக்கப்பெற்ற சோழக் கல்வெட்டுகள் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"நாராயணனன் திருச் சிற்றம்பல முடையான் இட்டகல்லு,
ஸ்வஸ்தி ஸ்ரீ இக்கல்லு வருதன் திருமால் இட்டது. இக்கல்லு அழகன் உத்தமராலையன் இட்டது.,
ஸ்வஸ்தி ஸ்ரீ இக்கல்லு அழகன் வத்தமானான தேசியாயத் துணைச் செட்டி இட்டது.,
ஸ்வல்தி ஸ்ரீ இக்கல்லு(பதியில்) வணிகன் தனி அப்பன் இட்டது."

இவ் அத்திபாரக் கற்களில் குறிப்பிடப் பட்டிருக்கும் பெயர்களை உடையவர்கள் அனைவரும் இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் என்னும் சிவன் கோயிலுடன் தொடர்புடையவராவார்கள். இவர்களில் நாராயணனன் திருச் சிற்றம்பலமுடையான் சோழ நிர்வாக அதிகாரியாகவும், அழகன் வத்தமான் நானதேசி வணிகனும் ஆவான். இரவிகுலமாணிக்க ஈஸ்வரத்திற்கு ஆறு பேரினால்வழங்கப்பட்ட திருநந்தாவிளக்குகள், ஐந்து பேரால் வழங்கப்பட்ட சந்தி விளக்குகள் பற்றிய தானங்களினையும் கல்வெட்டு செய்தி குறிப்பிடுகின்றது. இத் தானங்களை வழங்கியவர்களில்ஐந்து பேர் உடையான் என்ற பட்டத்தினைக் கொண்டிருப்பதால் அவர்கள் நிலவுடைமையாளர்களாக இருக்கலாம். மற்றையவர்கள் அரசரின் பரிவாரத்தினராகிய படைவீரர்கள், பணியாளர்களாக இருக்கலாம். சமூகத்தின் பல்வேறு நிலையில் உள்ளவர்களும் இரவிகுல மணிக்க ஈஸ்வரம் ஆகிய சிவன் கோயிலுக்கு தானம் வழங்கியிருப்பதனை அறிய முடிகின்றது.[13]

கந்தளாய் சோழ இலங்கேஸ்வரன் காலத்துக்குரியதான பதினோராம் நூற்றாண்டு கல்வெட்டு அங்கு அமைக்கப்பட்ட சைவ சமய - சமூக நிறுவனம் பற்றிய செய்தியினைக் குறிப்பிடுகின்றது. இக் கல்வெட்டின் தெளிவான வாசகங்கள் கீழ்வருமாறு அமைகின்றது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ கோ ஸ்ரீ சங்கவர்மாரான உடையார் ஸ்ரீ சோழ இலங்கேஸ்வர தேவற்கு யாண்டு பத்தாவது ராஜேந்திர சோழ வளநாட்டு ராஜவிச்சாதிர வளநாட்டு பிரஹ்மதேசம் ஸ்ரீ ராஜராஜச் சதுர்தேவிமங்கலத்து பெருங்குறி பெருமக்களோம் இய்யாட்டைக் கும்மநாயற்று பூர்வபஷத்து த்வாதஸியும் செய்வாய்க்கிழமையும் பெற்ற ஆயிலியத்து நாளன்றிரவு நம்மூர் தண்டுகின்ற முத்தங்கைக் கோயில் மாணி...."

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் விடயங்களை தெளிவுபடுத்த முடிகின்றது.

1. கந்தளாயில் அமைக்கப்பட்ட பிராமணக் குடியிருப்பாகிய பிரம்ம தேயம் இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என அழைக்கப்பட்டமை.
2. இவ் பிரம்மதேயத்தின் சபையார் பெருங்குறி பெருமக்கள் என அழைக்கப்பட்டமை.
3. சோழ இலங்கேஸ்வரனின் பத்தாவது ஆட்சியாண்டில் கந்தளாய் சதுர்வேதி மண்டலத்துப் பெருங்குறி மக்கள் மாசி மாதத்துப் பூர்வபஷத்துத் துவாதசியான செவ்வாய்க்கிழமையும் ஆயிலிய நட்சத்திரமும் கூடிய வேளையில் ஊர் விடயம் தொடர்பாக முடிவெடுப்பதற்கு கந்தளாய் சிவன் கோயில் மண்டபத்திலே கூடினார்கள் என்றும் அக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட தீர்மானங்களை அவ் கோயிலின் மண்டபத் தூண் ஒன்றிலே பதிப்பித்திருந்தார்கள்.[14]
4. கந்தளாயிலுள்ள குடியாளர்களிடமிருந்து இறை கடமைகளைச் சேகரிப்பதற்கு சபையார் அவ்வூர் பிராமணன்

(முத்தங்கைக் கோயில் மானி) ஒருவனை நியமித்திருந்தமை.

இவற்றிலிருந்து சிவன் கோயில்களை அண்டிய குடியிருப்புக்கள் பற்றியும், சிவன் கோயில்கள் சமுதாய நிறுவனங்களுடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்புகள் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

மெடிறிகிரியா இரண்டாம் இராஜேந்திரனது கல்வெட்டுச் செய்தியானது சோழப் படைவீரர் ஒருவரால் சிவன் ஆலயத்திற்கு வழங்கப்பட்ட தானம் பற்றியதாக அமைகின்றது. சோழப் படையாகிய இளைய மும்முடிச் சோழ அணுக்கர் பிரிவைச் சேர்ந்த வளவன் பித்தன் சரவணன் என்பவன் தனது மகனின் ஞாபகார்த்தமாக பண்டித சோழ ஈஸ்வரம் எனும் சிவன் ஆலயத்திற்கு நந்தா விளக்கு ஒன்றும், 26 பசுக்களும் தானமாக வழங்கிய செய்தியினை இக் கல்வெட்டு குறிப்பிடுகின்றதுடன்[15] சோழர்கால இலங்கையில் படைவீரர்களும் சிவன் கோயில் நடவடிக்கையில் பங்கு கொண்டதனை அறிய முடிகின்றது.

திருகோணமலை மானங்கேணி சாசனத்தில் மச்சகேஸ்வரம் (திருக்கோணேஸ்வரம்) எனும் சிவனாலயத்திற்கும் இன்னொரு ஈஸ்வரத்திற்கும் சோழ மண்டலத்து இராஜேந்திர வளநாட்டு மூவேந்த வேளான் ஆகிய கணபதி மேற்கொண்ட ஏதோ நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. மூவேந்த வேளான் என்ற பட்டம் சோழ நிர்வாகத்தில் உயர் பதவிகளிலிருந்தவர்களையே குறிப்பிடுகின்றது. திருக்கோணேஸ்வரமாகிய மச்சகேஸ்வரத்திற்கு வழங்கப்பட்ட தேவதானம் பற்றி நிலாவெளிக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. கல்வெட்டு சிதைவுற்றபடியால் தானம் வழங்கியவர் விபரம் தெரியவில்லை. ஆயினும் சிவன் கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்ட நிலத்தின் அளவு 250 வேலியாகும். (ஒரு வேலி நிலம் 2000 குழி ஆகையால் 1700 ஏக்கர் நிலப்பரப்பு). மிகப் பரந்த பிரதேசத்தினை தானமாக கொடுத்திருப்பதனை பார்க்கும் போது சோழ நிர்வாக அமைப்பில் உயர் அதிகாரங்களை கொண்ட ஒருவராலேயே இத் நிலத்தினை வழங்கியிருக்க முடியும். நிலாவெளிக் கல்வெட்டின் இறுதியாக "பன்மாகேஸ்வரர் ரஷை" எனப் பொறிக்கப்பட்டிருப்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். தமிழ் சாசன மரபில் இம் மொழித்தொடரானது சிவலாயங்களுக்கு வழங்கப்பட்ட தானங்கள் தொடர்பாகவே காணப்படுகின்றது.[16] பன்மாகேஸ்வரர் என்பது மகேஸ்வரனான சிவபெருமானின் அடியார்களையே குறித்து நிற்கின்றது. தென்னிந்திய சாசனங்களை அடிப்படையாக கொண்டு நோக்கும் போது பன்மாகேஸ்வரர் சிவாலய சமயக் கிரியைகளில் நன்கு பயிற்சி பெற்றவராயும், சமய அறிவில் சிறந்தவர்களாகவும் விளங்கினர். மச்சகேஸ்வரம் எனும் சிவன் ஆலயத்திற்குரிய விவகாரங்களை கவனிப்பதற்கு பன்மாகேஸ்வரர் இருந்துள்ளனர்.

**முடிவுரை**

இலங்கையில் கிடைக்கப்பெற்ற சோழக்கல்வெட்டுக்கள் பெரும்பாலும் ஏதோவொரு வகையில் சிதைவிற்குட்பட்டு காணப்பட்டமையால் தானங்களை யார் வழங்கினார்கள்? அறக்கட்டளையினை நிறைவேற்றும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்பட்டது? போன்ற கல்வெட்டின் இறுதிப் பகுதியில் குறிப்பிடும் விடயங்களை அறிந்து கொள்ள முடியவில்லை. மேலும் சோழர் ஆட்சிக்கால ஏனைய மண்டலங்களில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுத் தொகையுடன் ஒப்பிடுகையில் ஈழ மண்டலத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் மிகக் குறைவானவையாகும். கிடைக்கப்பெற்ற கல்

வெட்டுக்கள் கூட சிதைவுட்குட்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. காலத்துக்கு காலம் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களும், அந்நியரின் கலையழிவுக் கொள்கைகளுமே இத்தகைய நிலைக்கு காரணமாகும். எனினும் அழிவடையாத ஒரிரு கல்வெட்டுக்களிலிருந்தும், சிதைவடைந்த கல்வெட்டுக்களின் எஞ்சிய பாகங்களிருந்து பெறப்பட்ட செய்திகளிருந்தும் இலங்கையின் சோழர் கால நடவடிக்கைகள் பற்றி ஓரளவு அறிந்து கொள்ள முடிகின்றது. இக் கல்வெட்டுகளை ஆதாரமாக கொண்டு நோக்கும் போது சோழர் கால இலங்கையில் சிவ வழிபாடு சிறப்புற்றிருந்ததனை தெளிவாக அறிய முடிகின்றது. சிவனுக்கு புதிதாக பல கோயில்கள் அமைக்கப்பட்டதனையும், பழைய சிவன் கோயில்கள் புனருத்தானம் செய்யப்பட்டிருந்ததனையும், இக் கோயிலுக்கு சமூகத்தின் பல்வேறு பிரிவினை சேர்ந்தவர்களும் வழங்கிய பல்வகை தானங்கள் பற்றியும் இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றது. சோழர் கால இலங்கையில் திராவிடக் கலை மரபிலான சிவனாலயங்கள் (ஈஸ்வரங்கள்) பல சிறப்பு பெற்றிருந்ததுடன், அவற்றில் அன்றாட பூஜை வழிபாடுகள், கிரியைகள், திருவிழாக்கள் என்பன சிறப்புற இடம்பெறவும் வகைசெய்யப்பட்டிருந்தது. சோழக் கல்வெட்டுச் செய்திகள் மட்டுமன்றி இன்று அழிந்தும், அழியாத நிலையிலுள்ள பூநகரி மண்ணித்தலை சிவனாலயம்,[17] நெடுந்தீவு சிவன் ஆலய எச்சங்கள், பொலனறுவை சோழர்கால சிவனாலயங்கள்மற்றும்இலங்கையின்பல்வேறு இடங்களில் சோழர் காலத்துக்குரியதாக அடையாளப்படுத்தப்பட்ட சிவலிங்கங்கள், நடராஜர், அர்த்தநாரீஸ்வரர், சிவன், பார்வதி விக்கிரக வடிவங்கள் என்பனவும் சோழர் கால இலங்கையில் சிவ வழிபாடு சிறப்புற்றதனை உறுதிப்படுத்துகின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. *இந்திரபாலா, கா., (2006), இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு பொ.ஆ.மு , 300 - பொ.ஆ 1200, குமரன் புத்தக இல்லம், சென்னை கொழும்பு, ப.207.*
2. *மகேஸ்வரன்.வ., (2008),* சோழர்காலத்துக் கோயிலும் சமூகமும். *குமரன் புத்தக இல்லம், ப.44.*
3. South Indian Inscriptions (SII), Volume IV ed. 1915, H.Krishna Sasri, Madras.
4. South Indian Inscriptions (SII), Volume IV ed. 1915 : No.1414.
5. *பத்மநாதன்.சி., (2006),* இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - 1, *இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, ப.85.*
6. *பத்மநாதன்.சி, (2006), இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - 1, ப.407.*
7. **South Indian Inscriptions** (SII), Volume IV ed. 1915.
8. *சிற்றம்பலம்.சி.க., (1993),* யாழ்ப்பாணத் தொன்மை வரலாறு. *யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, ப.576.*
9. Veluppilai, Peradeniya, A., (ed), (1972), **Ceylon Tamil Inscriptions**, Pp.42-55.
10. **South Indian Inscriptions** (SII), Volume IV ed. 1915 : No.1414.
11. **South Indian Inscriptions** (SII), Volume IV ed. 1915 : No.1412.

12. South Indian Inscriptions (SII), Volume IV ed. 1915 : No.1414.


13. பத்மநாதன்.சி, 2006, இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - 1, ப.85.

14. பத்மநாதன்.சி, 2006, இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - 1, ப.91.

15. பத்மநாதன்.சி, 2006, இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - 1, ப.119.

16. பத்மநாதன்.சி, 2006, இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - 1, ப.106.

17. புஸ்பரட்ணம், ப., 1993, "பூநகரி தொல்பொருளாய்வு", யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, ப.84-103.



முதலாம் இராஜராஜனின் திருக்கேதீஸ்வரக் கல்வெட்டு

(பத்மநாதன்.சி.2013,ப.598)

| முதலாம் முகம் | இரண்டாம் முகம் | மூன்றாம் முகம் | நான்காம் முகம் |
|---|---|---|---|
| ....சோழ மண்<br>டலத்து ஷத்<br>த்ரிய சிகாம<br>ணி வள நாட்<br>டு வேளார் நா<br>ட்டுச் சிறு கூ<br>ற்ற நல்லூர் கிழ<br>வன் தாழி கு<br>மரன் ஈழமா<br>ன மும்முடி<br>சோழ மண்<br>டலத்து மா<br>தோட்டமான<br>ராஜராஜ புர<br>த்து எடுப்பி<br>த்த ராஜராஜ<br>ஈஸ்வரத்து ம<br>ஹா தேவர்க்கு<br>சந்த்3ராதி3 த்தவ<br>(ல்) நிற்க ராஜரா<br>ஜ புரத்து நக | ளைக் கொடி நா<br>டான அருமொழி<br>தேவ வள நாட்டு<br>க்கு இசங்கும் பா<br>தைகளால் நிச<br>தம் இரண்டு வட்ட<br>மு(ம்) பீடிலிகை வா<br>ரியும் இவனே மே<br>ல் இறுவதாகவும் இ<br>வ்வூரில் நெய்யும்<br>தறிகளால் கூடி<br>ன முதலும் வட்<br>டத்தால் கூடி<br>ன முதலும் பா<br>தை படவுகளா<br>ல் கூடின முத<br>லுங் கொண்டு<br>திருநாட்த்3த4ர்மம்<br>வைய்யாசி விசா<br>கம் ஏழு நாளும்<br>விழா வெடுத்து<br>தீர்த்தம் அட்<br>டுவிப்பதாக<br>வும் ஆய....<br>விடங்.... | வன் பெருங்<br>கோலால் ஐங்<br>கோல்- உட்பட வ<br>டுக்கும் மேல் பா<br>ற் கெல்லை ராஜரா<br>ஜப் பெருந் தெரு<br>வுக்குக் கிழக்கும்<br>வடபாற் கெல்லை<br>கம்மாணச் சேரி<br>க்குத் தெற்கும் இ<br>வ் விசைத்த பெ<br>ரு நான்கெல்லை<br>க்குள் அகப்பட்ட<br>நிலத்தில் இவ்<br>வூர்க் குடி குன்ற<br>ன் காமன் இருந்<br>த மாளிகையு<br>ம் வீடும் தோட்<br>ழி அரிசி திருவமி<br>கவும் இன்னடு<br>வுட்பட்ட இத்தனை<br>யும் இத்தேவர்<br>க்கு இறைஇலி<br>தேவதான மாவ | ஒன்றும் பா<br>தை படவுகளால்<br>அக்கம் ஒன்று<br>ம் இவ்வூர் நெய்<br>யும் தறிகளால்<br>துறியால் திங்க<br>ள் அரைக்கால் அக்<br>கமும் இறுப்பன<br>வற்றில் குடுப்போ<br>ன்னிடை காசினவா<br>யொரு வட்டமும்<br>கொள்வானிடை ஒ<br>ரு வட்டமும் கொ<br>ள்வதாகவும்<br>ஆக இப்படி கொ<br>ண்டு பொழுது<br>இரு நாழியாக<br>நிசதம் அறு நாழி<br>டமும் நீங்கலா<br>ர்தும் அ(டுவிக்கு-)<br>ம் மாணி இரண்டு<br>க்கு நிசதம் நெல்<br>லெண்ணையும்<br>மடபதி ஒருவ..... |
| (SII Volume iv.1915) | (Veluppillai.A.1972) | | |